மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஈரோடு பகுதிக்கு அருகில் உள்ள அந்தக் குளத்தில் ஏற்கெனவே படகு குழாம் அமைப்பதற்காக சுற்றுலாத் துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்கிற தகவலை இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

99—

பேருந்து வசதி

***22216—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சுழி தொகுதி, காரியாபட்டி ஊராட்சி ஒன்றியம், சோலைக்கவுண்டன்பட்டி, கெப்பிலிங்கம்பட்டி மற்றும் அழகியநல்லூர் ஆகிய கிராமங்களுக்குக் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விருதுநகரிலிருந்து சோலைக்கவுண்டன்பட்டி, கெப்பிலிங்கம்பட்டி, அழகியநல்லூர், மாந்தோப்பு வழியாக காரியாபட்டிக்கு 15 நடைகளும், விருதுநகரிலிருந்து அழகியநல்லூர் விலக்கு, அழகியநல்லூர், மாந்தோப்பு வழியாக காரியாபட்டிக்கு 3 நடைகளும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், விருதுநகரிலிருந்து கோரிக்கை கிராமங்களான சோலைக்கவுண்டன்பட்டி, கெப்பிலிங்கம்பட்டி மற்றும் அழகியநல்லூர் ஆகிய கிராமங்களுக்கு தனித்தனியே நேரடி பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, இப்பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழித்தடமானது மாவட்டத் தலைநகராக இருக்கக்கூடிய விருதுநகரையும் வட்டத் தலைமையிடமாக இருக்கக்கூடிய காரியாபட்டியையும் இணைக்கக்கூடிய முக்கியமான வழித்தடமாக இருக்கிறது. விருதுநகரிலிருந்து காலை 10–30 மணிக்கும், மதியம் 2–15 மணிக்கும் புறப்படக்கூடிய இந்த பேருந்துகள்தான் காரியாபட்டிக்கு சென்றுவிட்டு திரும்பக்கூடிய வழியில் கெப்பிலிங்கம்பட்டி, சோலைக்கவுண்டன்பட்டி கிராமங்கள் வழியாக வரக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, அந்த மக்களுடைய கோரிக்கையாக காலை 8–30 மணிக்கும், இரவு 8–00 மணிக்கும் கெப்பிலிங்கம்பட்டி, சோலைக்கவுண்டன்பட்டி வழியாக விருதுநகர் செல்லக்கூடிய புதிய பேருந்து வசதியை செய்துதர வேண்டும். அதைப்போல, அழகியநல்லூர், மாந்தோப்பு வழியாகச் செல்லக்கூடிய இந்த வழித்தடத்தில் இரவு 8–00 மணிக்குமேல் பேருந்து வசதி இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, இரவு 9–00 மணிக்குமேல் விருதுநகரிலிருந்து இந்த வழிதடத்திலே காரியாபட்டிக்கு ஒரு பேருந்து வசதி ஏற்படுத்துவதற்கும், பள்ளி, கல்லூரி மாணவர்கள் வசதிக்காக மாலை 4–30 மணியளவில் காரியாபட்டியிலிருந்து அழகியநல்லூர் வரக்கூடிய வகையில் இந்த பேருந்துகளின் நேரங்களை மாற்றியமைப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தக் கிராமங்களில், சோலைக்கவுண்டன்பட்டி கிராமத்தில் சுமார் 200 மக்கள் தொகையும், கெப்பிலிங்கம்பட்டி கிராமத்தில் சுமார் 250 மக்கள் தொகையும், அழகியநல்லூர் கிராமத்தில் சுமார் 350 மக்கள் தொகையும் உள்ளது. எனவே, இப்பொழுது இயக்கப்படுகின்ற பேருந்துகளில் பயணிகளுடைய

அடர்வு சராசரியாக 35 சதவிகிதம்தான் இருக்கிறது. இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பள்ளி மாணவர்களுக்கு பேருந்து வசதி வேண்டுமென்று கோரியிருக்கிறார். அவர் எழுத்துபூர்வமாக அந்த நேரங்களை குறிப்பிட்டுக் கொடுத்தால், அந்த வழித்தடங்களில் பேருந்து நேரங்களை மாற்றியமைத்து இயக்குவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சுழி தொகுதியில் முக்கியமான வழித்தடம் என்பது நரிக்குடியிலிருந்து திருப்புவனம் செல்லக்கூடிய சாலை. இந்தச் சாலை விருதுநகர் மாவட்டத்தையும், சிவகங்கை மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய முக்கியமான சாலையாக இருக்கிறது. இப்போது நரிக்குடியிலிருந்து மதுரைக்கு 2 முறைகளும், அதேபோல் மதுரையிலிருந்து நரிக்குடிக்கு 2 முறைகளும்தான் அரசுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஒவ்வொரு நடைக்கும் இடைப்பட்ட கால இடைவெளியை கணக்கிட்டால் ஏறத்தாழ 2 மணி நேரம் ஆகிறது. எனவே, இந்தக் குறிப்பிட்ட வழித்தடத்தில் நரிக்குடியிலிருந்து திருப்புவனத்திற்கு புதியதாக நகரப் பேருந்து வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தால், அங்கே இருக்கக்கூடிய சாலை இலுப்பக்குளம், நாலூர், புல்வாய்க்கரை, அழகாபுரி, முக்குளம், நாங்கூர் உள்ளிட்ட 70–க்கும் மேற்பட்ட கிராமங்கள் இந்த நகரப் பேருந்தினால் பயன்பெறக்கூடிய வாய்ப்பிருக்கிறது. கல்லூரிகளுக்குச் செல்லக்கூடிய மாணவர்களும், பள்ளிகளுக்குச் செல்லக்கூடிய மாணவர்களும் திருப்புவனம் சென்று மதுரைக்கு செல்லக்கூடிய வாய்ப்பும் உருவாகும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து, புதிய வழித்தடமாக நரிக்குடியிலிருந்து திருப்புவனத்திற்கு நகரப் பேருந்தினை விடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய*

2019 ஜூலை 12]

நரிக்குடி முதல் திருப்புவனம் வழித்தடத்தை துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, அந்த வழித்தடத்தில் புறநகர் பேருந்து இயக்குவதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

100—

மாணவியர் விடுதி

***22867—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *வேடசந்தூர் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையிலே துயில்கொண்டிருக்கக்கூடிய எங்களுடைய குடும்ப குல தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், இந்தச் சபையில் நடுநாயகமாக அமர்ந்திருக்கக்கூடிய தங்களையும் வணங்குகிறேன்.*

(அ) *மற்றும்* (ஆ) *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதியில் பள்ளி மாணவியர்களுக்கான பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற வினாவினை வேடசந்தூர் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள்.*